Registered as a Newspaper

Your Friends in Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.


# உதயன்

விலை: ரூ. 1-25

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆனி 17 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 4 (01 — 07 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 185



''ஐயோ எம்மை காப்பாற்றுங்கள் ஐயா! பாதுகாப்புத் தாருங்கள்! இந்தியாவுக்கு கொண்டு போங்கள்!''—இவ்வாறு இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் முன் வடமராட்சி மக்கள் கடந்த திங்களன்று கண்ணீரும் கம்பலையுமாக கதறி நின்ற உருக்கமான காட்சியை எமது படப்பிடிப்பாளர் தமது கமராவுக்குள் அடக்கிக் கொண்டார். (படங்கள் ஜெயம்)

# சிங்களப் பகுதியில் புலிகள் தாக்கியதில் 12 படையினர் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 1

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முந்திரிக்குளம் சிங்களப்பகுதியில் நேற்றுக்காலை 6 மணி அளவில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் பன்னிரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

பெருந்தொகையான ஆயுதங்கள் படையினரிடமிருந்து விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

உயிரிழந்த பன்னிரண்டு படையினரது சடலங்களும் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டு பின்னர் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

திருகோணமலை— முல்லைத்தீவு வீதியில் மருதங்குளத்திற்கும் மருதமடுக்குளத்துக்கும் இடையில் வீதி அமைக்கும் வேலையில் ஈடுபட்ட படையினரே புலிகளின் திடீர் தாக்குதலுக்கு இலக்காகினர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சிங்களப் பகுதிகளில் முந்திரிக்குளமும் ஒன்றாகும்.

இருபது போராளிகளைக் கொண்ட விடுதலைப் புலிகள் குழு இத் தாக்குதலை நிகழ்த்தியதாக அரச தரப்பு அறிக்கை ஒன்று கூறுகிறது.

இரு சிங்களக் கிராமங்களுக்கு இடையில் போக்குவரத்துத் தொடர்பை ஏற்படுத்தும் முயற்சியில் இந்தப் படையினர் ஈடுபட்டிருந்தனர் என்றும் அரச அறிக்கை தெரிவிக்கிறது. (உ-10)

## அங்கீகாரம் கிடைக்குமா?

யாழ்ப்பாணம், ஜூலை 1

இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா வகுத்துள்ள புதிய மாற்று நடவடிக்கைகளில் தமிழ்ப் போராளிகளை அங்கீகரிப்பதும் ஒரு திட்டமா?

தமிழகத்தில் இருந்து கிடைத்த தகவல்கள் மூலம், தமிழ்ப் போரா

(4-ஆம் பக்கம் பார்க்க)

## படைகள் வடக்கே நகர்வு

கொழும்பு, ஜூலை 1

வவுனியாவிலிருந்து பெரும் எண்ணிக்கையான படைகள் நேற்று காலை முதல் வடக்கு நோக்கி நகர்வதாக பிந்திக் கிடைத்த செய்தி தெரிவித்தது.

இதனால் யாழ்-கொழும்பு போக்குவரத்துச் சேவைகள் நேற்று பெரிதும் தாமதமடைந்தன என்று அறிவிக்கப்படுகிறது. (உ)

# ஸ்ரீலங்காவை ஆக்கிரமிக்க எண்ணுவோர் சிங்களவர் மத்தியில் உள்ள தமிழர் பற்றி சிந்திக்கட்டும்

## ஜேர்மன் சஞ்சிகைக்கு லலித் பேட்டி

பொன், ஜூலை 1

ஸ்ரீலங்காவை ஆக்கிரமிக்க எண்ணுவோர் சிங்கள மக்கள் மத்தியில்



பெரும் எண்ணிக்கையில் வாழும் தமிழர் பற்றி யோசிக்க வேண்டும் அப்படி ஆக்கிரமிப்பு நடந்தால் அந்தத் தமிழருக்கு பாதுகாப்பு வழங்குவது பெரும் பிரச்சினையாக இருக்கும்.

தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஜெர்மன் சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இப்படித் தெரிவித்தார். பேட்டியில் அமைச்சர் அத்துலத் முதலி சொன்னதாவது;

ஜே.வி.பியினரின் பயமுறுத்தல்களை நாம் சமாளிப்போம். அவர்களின் செயல் திட்டங்கள் எமக்கு ஆரம்பத்திலேயே கிடைத்து விட்டன.

ஆயுதப்படையில் பெரும் எண்ணிக்கையில் ஜே.வி.பியினர் ஊடுருவியுள்ளனர் என்று பெரிதுபடுத்திக் கூறப்படுகின்றது. நிலை அது அல்ல. ஜே.வி.பிக்கு மக்கள் மத்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## கிரிவிகாரையில் சொன்னேன்; ஹரியானாவில் பதில்:

# இந்திய ஆட்சியாளர் மீது பாய்கிறார் பிரேமதாஸா

## ஹிட்லர், முசோலினியோடு ஒப்பீடு

கொழும்பு, ஜூலை 1

தவறு செய்பவர்கள் அதன் பலனை அனுபவிப்பர் என்று 'கிரிவிகாரை'யில் வைத்துச் சொன்னேன். உடனே 'ஹரியானா'வில் அதற்குப் பதில் கிடைத்தது.

பிரதமர் பிரேமதாஸா இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா நகரசபைகள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் பிரதமர் இப்படிக் கூறினார்.

பிரதமர் மேலும் சொன்னதாவது;

இந்திய மக்கள் நியாய



மாக நடந்துகொள்கின்றனர். ஆகாய அத்துமீறலுக்காக இந்திய அரசைத் தான் கண்டிக்க வேண்டும்;

எமது அரசு இந்திய மக்களுக்கு நல்லெண்ணக் கரத்தை நீட்டுகின்றது. ஹரியானாவில் இந்திய மக்கள் தெளிவான தீர்ப்பை அளித்து விட்டனர்.

ஆனால் சுதந்திரக் கட்சியோ ஆக்கிரமிப்பாளருடன் அனுசரணையாக நடந்து கொள்கிறது.

சர்வதேச சமூகத்தில்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

01-07-1987
புதன்கிழமை
சுபநேரம்:-
4 26 முதல் 5.56 வரை
ராகுகாலம்:-
11.56 முதல் 1. 26 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஸ்கந்த பஞ்சமி
மாணிக்க வாசகர் குருபூஜைத் தினம்

## முச்சந்தி முரளி



அப்ப அவை இந்தியாவுக்கு எதிராகச் சண்டை போடவும் தயாராகினம் எண்டு சொல்லாமல் சொல்லுறார் அச்சாணியார், இல்லையே!

# கிராமங்கள் தோறும் சுயபாதுகாப்பு அமைப்புகள்

## விடுதலைப் புலிகள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 1

கிராமங்கள் தோறும் சுயபாதுகாப்பு அமைப்புக்களை ஏற்படுத்த புலிகள் திட்டமிட்டிருக்கின்றனர்.

எனவே மக்கள் ஆண் பெண், முதியோர், சிறியோர் என்ற வேறுபாடின்றி அனைவரும் இந்த அமைப்பில் இணைந்து கொள்ள வேண்டும். அதன் மூலம் எம்மை நிரந்தரமாக காப்பாற்றக்கூடிய தமிழ் ஈழப் போரில் தம்மைப்பிணைத்துக் கொள்ளவேண்டும். —இப்படி விடுதலைப் புலிகள் அமைப்பு விடுத்திருக்கின்றனர்.

இது தொடர்பாக நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் அரசியல்பிரிவுப் பொறுப்பாளர் திலீபன் தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்கா அரசின் இன அடக்குமுறை நடவடிக்கைகளினால் இன்று வரை 20 ஆயிரத்துக்கும மேற்பட்ட மக்கள் பலி

(4-ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

நேற்றைய முந்திரிக்குளத் தாக்குதலின் போது புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம்:-

- ★ ரி56-1 ரக ரைபிள்கள் — 7
- ★ ரி56-2 தன்னியக்க ரைபிள்கள் – 5
- ★ மேலதிக ரவைக்கூடு - 39
- ★ 7.62 (இடைத்தர) ரவைகள் - 650
- ★ ஹெல்மெட்டுகள் – 12
- கோல்ஸர் – 12

(உ-எ-10)

# ஆலோசனைகளின் பின் டிக்ஸிற் திரும்பினார்

கொழும்பு, ஜூலை 1

இலங்கை இனப்பிரச்சினை குறித்து இந்தியத் தலைநகர் புதுடில்லியில் முக்கிய ஆலோசனைகளை நடத்திய பின்னர் இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் நேற்று கொழும்பு திரும்பினார்.

கடந்த வியாழக்கிழமை மாலை திடீரென கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சென்ற தூதுவர் டிக்ஸிற் –

புது டில்லியில் பிரதமர் ராஜிவ் காந்தியுடனும், வெளிவிவகார அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர்களுடனும், உயர் அதிகாரிகளுடனும் பேச்சுகளை நடத்தியிருந்தார் (உ)

# யூனியன், மகாஜனா மீண்டும் இயங்குகின்றன

பலாலி, ஜூலை 1

தெல்லிப்பளையில் கடந்த சில வாரங்களாக மூடப்பட்டிருந்த பல பிரபல பாடசாலைகள் நேற்றுத் தொடக்கம் இயங்க ஆரம்பித்துள்ளன.

யூனியன் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, சைவப் பிரகாச வித்தியாசாலை, தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி என்பனவே தற்போது மீண்டும் இயங்கத் தொடங்கியிருக்கின்றன.

இராணுவப் பகுதிக்குள் இருக்கும் வீமன்காமம் மகா வித்தியாலயமும், ஷெல் தாக்குதலால்

(4-ஆம் பக்கம் பார்க்க)

# ஜேர்மனியில் தீவிபத்து இரு தமிழர் பலி!

கொழும்பு, ஜூலை 1

மேற்கு ஜேர்மனியில் உள்ள விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் இரண்டு இலங்கைத் தமிழர் உயிரிழந்தனர்.

பத்துப் பேர் வரையில் காயமடைந்தனர்.

இந்த விடுதியில் 50 தமிழ் அகதிகள் வரையிலே தங்கியிருந்தனர்.

தீவிபத்து ஏற்படும் முன்னர் குண்டு ஒன்று வெடித்த சத்தம் கேட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)



வதிரி பரமானந்தா ஆச்சிரமத்துக்கு விஜயம் செய்த இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி திரு. சௌத்திரி அங்குள்ள சிறுவர்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கினார்.

திரு. சௌத்திரியுடன் சுவாமி பிரேமானந்தா, யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தலைமை, அலுவலக உதவி அரசாங்க அதிபர் திரு. பொ. பாலசிங்கம் ஆகியோர் மேற்படத்தில் காணப்படுகின்றனர்.

கரவெட்டி தேவாலயத்தில் தங்கியுள்ள அகதிகளுக்கு இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி உணவுப் பொதிகளை வழங்குவதைக் கீழ் உள்ள படத்தில் காணலாம். (படங்கள்: ஜெயம்)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

தையல், கட்டிங் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். லக்கி காமன்ஸ், 413, நாவலர் றோட், ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம். (1253)


## இறக்கும் வேலை இன்று ஆரம்பமாகும்

சென்னை, ஜூலை 1

'பருக்கா' – 2' கப்பலில் அனுப்பப்பட்ட உணவுப் பொருள்களை இறக்கும் வேலைகள் காங்கேசன் துறைமுகத்தில் இன்று புதன்கிழமை ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையில் சென்னை திரும்பிய 'இலண்ட் பிறைட்' கப்பலில் அடுத்த தொகுதி உணவுப் பொருள்களை அனுப்பி வைக்கும் திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்று அறிவிக்கப்படுகின்றது. (உ–எ)

★கொழும்புக்கு

# இடம் பெயர்ந்த மாணவர்களின் நடத்தை குறித்து தனிவிசாரணை

## கல்வி அமைச்சு விவரம் திரட்டுகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 1

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளை அடுத்து யாழ் குடாநாட்டிலிருந்து கொழும்புக்கு இடம் பெயர்ந்து சென்று அங்குள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவர் குறித்தும், கல்வி அமைச்சு தனித்தனியாக விவரங்களைத் திரட்டி வருகிறது.

இடம்பெயர்ந்த மாணவர்களின் சடந்த கால பாடசாலை வரவு நிலை, அவர்களின் நடத்தை, புற நடவடிக்கைகள், ஈடுபாடுகள் ஆகியவை பற்றித் தனித் தனி அறிக்கைகளைப் பெறுவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

இவ்வாறு இடம்பெயர்ந்து சென்ற மாணவர்களின் பட்டியல் ஒன்று யாழ் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டிருக்கிறது. கல்வித் திணைக்களம் இத்தகைய மாணவர்கள் இங்கு கல்வி பயின்ற பாடசாலைகளின் அதிபர்கள் மூலம் அம் மாணவர்கள் பற்றிய விவரங்களைத் திரட்டி வருகிறது. (உ–ள)

## ஆறு கட்சிக் கூட்டணி ஒருமேடையில் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 1

ஆறு கட்சிக் கூட்டணியினர் ஒன்றாக நடத்தும் பொதுக் கூட்டம் ஒன்றுநாளை இரண்டாம் திகதி கொழும்பு கம்பல் பூங்காவில் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அண்மையில் கூட்டணி அமைத்த ஆறு எதிர்க் கட்சிகளும் கூட்டாக நடத்தப் போகும் முதலாவது பொதுக்கூட்டம் இதுவாகும்.

லங்கா சமசமாஜக் கட்சி இக் கூட்டணியில் இடம்பெறவில்லை.

கூட்டணியில் இடம் பெற்றுள்ள ஆறு கட்சிகளும் வருமாறு;

1. சுதந்திரககட்சி
2. கம்யூனிஸ்ட்கட்சி
3. ஸ்ரீலங்கா மக்கள் கட்சி
4. நவசமசமாஜக் கட்சி
5. மக்கள் ஐக்கிய முன்னணி
6. ஜனநாயக தொழிலாளர்காங்கிரஸ். (உ–எ)

## ★ இப்படியும் ஒரு முன்னணி

கொழும்பு, ஜூலை 1

இலங்கைப் பிரிவினை எதிர்ப்பு முன்னணி என்ற அமைப்பு வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நடைபெற உள்ள நாடாளுமன்ற இடைத் தேர்தல்களில் போட்டியிட உள்ளதாம்.

முன்னணியின் செயலாளரான சட்டத்தரணி கே. ஞானச்சந்திரன் இதனை அறிவித்துள்ளார்.

முன்னணியின் செயலகம் நீர்கொழும்பில இயங்குவதாகத் தெரிய வருகிறது. (உ–எ)

## கரணவாயில் மட்டும் 48 பேர் மாண்டனர்

வடமராட்சி அசம்பாவிதங்களின்போது கரணவாய் வடக்கில் 48 பேர் கொலை செய்யப்பட்டனர். அதில் நால்வர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

இவ்வாறு கரணவாய் வடக்கு அகதிகள் புனர்வாழ்வு அதிகாரி ஒருவர் சகல வெகுஜன ஸ்தாபனங்களின் பொதுக்கூட்டத்தில் கூறினார்.

கரணவாயில் 300இளைஞர்கள் வரை கைதாகியுள்ளனர். 48 பேர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சின்னத்துரை எனும் இளைஞர் பூசாவிலிருந்து விடுதலையாகி வரும் வழியில் சித்திரவதைகளால் மயங்கி இறந்தார்.

இவ்வாறு அவர் கூறினார். (இ–ள)

## டிச. 19 யோசனையை ஸ்ரீ. ல. சு. க. எதிர்க்கும்

கொழும்பு, ஜூலை 1

டிசம்பர் 19 யோசனைகளை சுதந்திரக் கட்சி எதிர்க்கின்றது.

இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா சொன்னார்.

டிசம்பர் 19 யோசனையை கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் முஸ்லிம், சிங்கள மக்கள் விரும்பவில்லை.

இந்த யோசனைகள் அமுல் நடத்தப்பட்டால் அவர்கள் நிச்சயம் பாதிக்கப்படுவர்.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சுயாட்சி அவசியம் தான்.

ஆனால் டிசம்பர் 19 யோசனையில் கூறப்பட்ட சுயாட்சி முறை அல்ல—

இப்படி திருமதி. பண்டாரநாயக்கா தெரிவித்தார். (இ–எ)

## டிசம்பர்19 நிலைப்பாடு தரையிலும் ஏற்பட வேண்டும் 'புரொன்ட்லைன்' தலையங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

பலவின நிலையில் இருந்து பேச்சுக்களை நடத்த தமிழர் முன்வருவர் என்று எதிர்பார்க்க முடியாது.

ராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டு டிசம்பர் 19 நிலை தரையில் ஏற்பட வேண்டும்.

புரொண்ட்லைன் தனது ஜூன் 13-26 இதழில் எழுதிய ஆசிரியர் தலையங்கத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

வாய்மூல ஆதரவிலும் பார்க்கக் கூடிய ஆதரவை இந்தியா தமிழருக்கு வழங்க உள்ளது என்ற செய்தியைத்தான் விமானத்தின் மூலம் உணவுப் பொதிகள் போட்ட செயல் ஜெயவர்த்தனக்கள், பிரேமதாசாக்கள், அத்துலத்முதலிகள் ஆகியவர்களுக்கு தெரிவித்துள்ளது.

இப்படி ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

## பிரசைகள் குழுக்களின் பொறுப்புகள் அதிகம்

### ஒன்றியச் செயலாளர் விளக்கம்

காங்கேசன்துறை ஜூலை 1

''மக்களுக்கு பாதிப்புகள், உயிர்ச்சேதங்கள் அதிகரித்து வரும் சூழ்நிலையில் பிரசைகள்குழுக்களின் பொறுப்புகளும், கடமைகளும் அதிகரித்து வருகின்றன. பிரசைகள் குழு உறுப்பினர்கள் இதை உணர்ந்து செயல்பட வேண்டும்.''

—இவ்வாறு வலி. வடக்கு பிரசைகள் குழுக்களின் ஒன்றிய செயலாளரும் தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவருமான திரு. எஸ். சிவமகாராசா வலி. வடக்கு பிரசைகள் குழுக்களின் ஒன்றிய கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய மண்டபத்தில் நடந்த இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

வலி. வடக்குப் பகுதியில் கடந்த 7 ஆம் திகதிக்குப் பின் பல்வேறு அனர்த்தங்கள் இடம் பெற்றுள்ளன.

ஆனாலும் இது பற்றி சரியான ஆதாரபூர்வமான தகவல்களை இதுவரை சேகரிக்க முடியவில்லை.

இதனால் அரச அதிகாரிகளுடனும், தொண்டர் ஸ்தாபனங்களுடனும் தொடர்புகொண்டு நிவாரணங்களைப் பெறுவதிலும் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு பகுதியிலும் இயங்கும் பிரசைகள் குழுக்கள் இதுபற்றிய தகவல்களை உடனுக்குடன் சேகரித்து ஒன்றியத்திற்கு தந்துதவவேண்டும் என்றார். பல பிரசைகள் குழுக்களின் பிரமுகர்கள் இந்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். (உ–68)

## முல்லைத்தீவில் 30 ஆயிரம் அகதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

முல்லைத்தீவில் 30ஆயிரம் தமிழ் அகதிகள் தற்போது தங்கியுள்ளனர். இவர்களில் 10 ஆயிரம் பேர் யாழ் குடா நாட்டைச் சேர்ந்தவர்கள்.

இவ்வாறு முல்லைத்தீவு பிரசைகள் குழுச் செயலாளர் திரு. சந்திரசேகர் பிரசைகள் குழுக்கள் பொதுஸ்தாபனங்களின் கூட்டத்தில் கூறினார்.

முல்லைத் தீவிலுள்ள அகதிகளை அங்குள்ள பொது ஸ்தாபனங்களின் உதவியுடன் பிரசைகள் குழுக்கள் பராமரித்து வருகின்றன என்றும் அவர் கூறினார். (இ–ள)

### உண்ணாவிரதம்

கொக்குவில், ஜூலை 1

யாழ் நாச்சிமார் கோவிலடியிலும் அரியாலை சரஸ்வதி ஆலய முன்றலிலும் நடைபெற்ற உண்ணாவிரதங்களில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர். (இ–69)

மக்கள் முகம்

## கிராமிய சுகாதார உதவியாளர்கள்

அனலைதீவு, ஜூலை 1

ஊர்காவற்றுறைப் பிரிவிலுள்ள குடும்ப நலச் சேவையாளர் வெற்றிடங்களுக்காக பின்வரும் கிராமிய சுகாதார உதவியாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

செல்வி கு. விஜயராணி–கரம்பொன், செல்வி ச. சரசகிதா–அல்லைப்பிட்டி, செல்வி. கு. நாகபூஷணி –நயினாதீவு, செல்வி க. கமலாதேவி–காரைநகர் மேற்கு, செல்வி த. இரத்தினேஸ்வரி–நெடுந்தீவு கிழக்கு, செல்வி வ. தவமணிதேவி–அனலைதீவு, செல்வி க. வில்லிரேஸ்–மண்டைதீவு, செல்விக. சித்திரா–நாரந்தனை, செல்வி இ. நாகேஸ்வரி–சாட்டி (அகதிகள் முகாம்), செல்வி அ. ஜெயவதனி–எழுவைதீவு. (இ-18)

சண்டிலிப்பாயில்

## மேசன், தச்சு வேலை தொழில் பயிற்சி

மானிப்பாய், ஜூலை 1

மேசன் வேலை, தச்சு வேலை போன்ற தொழில்களில் பயிற்சிபெற விரும்பும் இளைஞர்கள் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப் பட்டிருக்கிறது.

சண்டிலிப்பாய் அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு தொழில் துறைப்பயிற்சி அளிக்க வீடமைப்புப் பிரிவு முன்வந்துள்ளது.

பதினாறு வயது தொடக்கம் இருபத்தைந்து வயதுக்குட்பட்டவர்கள் மேற்படி பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்.

நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு இவ் வேலைகளில் பயிற்சி அளிக்கப்படுவதுடன் பயிற்சிக்கால முடிவில் சான்றிதழ்களும், தொழிலுக்கு வேண்டிய உபகரணங்களும் வழங்கப்படும்.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வீடமைப்பு உத்தியோகத்தர் திரு. ச. குலசபாநாதன் இத் தகவல்களைத் தெரிவித்துள்ளார். (உ–90)

நீதிமன்ற விசாரணையை எதிர்நோக்கி

## பூஸாவில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை !

### நீதிமன்றத்தில் தகவல்

கொழும்பு, ஜூலை 1

21 மாதங்களுக்கு மேலாக பூஸா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் குற்றப் பத்திரிகையை வாங்கும் முன்னரே முகாமில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

நடேசன் கந்தன் என்பவரே இப்படி உயிரிழந்தார்.

அவர் மீதான வழக்கு கடந்த வாரம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எச். டபிள்யு. சேனநா... விசாரணைக்கு வந்தது.

எதிரியிடம் கையளிப்பதற்காக குற்றப்பத்திரிகையை அரச சட்டத்தரணி தயாராக வைத்திருந்தார்.

பெயர் கூப்பிடப்பட்டபோது எதிரி நீதிபதி முன் நிறுத்தப்படவில்லை.

கடந்த 5 ஆம் திகதி பூஸாவில் வைத்து அவர் சுட்டுக் கொல்லப் பட்டு விட்டார் என்று நீதிபதிக்கு அறிவிக்கப் பட்டது.

நீதிமன்றத்தில் மகனைப் பார்க்கலாம் என்று வந்திருந்த தாய் இதைக் கேட்டு கண்ணீர் விட்டுக்...

இளைஞரிடம் கையளிக்கப்பட விருந்த குற்றப் பத்திரிகை, ஒப்புதல் வாக்கு மூலம் ஆகியவற்றைத் தன்னிடம் ஒப்படைக்கும் படி இளைஞரின் சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் நீதிபதியிடம் கூறினார்.

எதிர் கால நடவடிக்கைக்கு இது தேவைப்படுவதாக திரு. பொன்னம்பலம் தெரிவித்தார்.

அதனை அரசசட்டத்தரணி எதிர்த்தார்.

இறுதியில் நீதிபதி அவற்றின் பிரதிகளை திரு. பொன்னம்பலத்திடம் ஒப்படைக்கும் படி உத்தரவிட்டார். (உ–எ)


HORIZON ENTERPRISES

# பிரயாண ஒழுங்குகள்

★ டுபாய் ★ குவைத் ★ சவூதிஅரம்கோ கொம்பனி

டிரைவர் விமானநிலையக்கிளீனர் ஹொஸ்பிடல்கிளீனர்
சமையற்காரர் H. V. டிரைவர் தச்சுவேலை
பணிப்பெண்கள் மேசன்

சிங்கப்பூர் பணிப் பெண்கள்

குறைந்த கட்டணத்தில் வயதெல்லை 17 - 35

மற்றும் அனைத்து மத்தியகிழக்கு நாடுகளுக்கான வெற்றிடங்கள் மிக அதிகளவில் எம்மிடம் இருப்பதால் தாமதமின்றி தொடர்பு கொள்ளவும். தற்போதைய நாட்டு நிலைமை காரணமாக எம்முடன் தொடர்பு கொண்டு நாம் முதல் தடவையில் அவர்களை கொழும்பு அழைத்துச் சென்று மீண்டும் யாழ் திரும்பாது எமது பாதுகாப்புடன் சகல வசதிகளும் நிறைந்த எங்கள் சொந்த வதிவிடத்தில் வைத்து மிகத் துரிதகதியில் பயணம் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்பதையும் உண்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம் எந்தக் காரணம் கொண்டும் முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. எமது முகவர் நிலையத்தினால் பயணம் மேற்கொள்வோர் பெயர் விபரம் அடுத்த வாரம் வெளியிடப் படும். மற்றும் எம்மிடம் எல்லா நாட்டிற்கான சகலவிதமான முத்திரைகளும் மலிவு விலையில் கிடைக்கும். உங்கள் கடவுச்சீட்டுக்கள் [ PASS PORT ] குறித்த தவணையில் குறைந்த செலவில் செய்து தரப்படும்.

★ மாலைதீவு செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்: வயதெல்லை 17 — 35. மிகக்குறைந்த கட்டணத்தில் துரிதகதியில் செய்து தரப்படும்.

A. பத்மதாஸ்
இல, 97/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

HORIZON ENTERPRISES
No. 87, 2/1, 2nd Floor,
Kollupitiya Lane,
COLOMBO - 3.
Telephone: 574000


★ செய்திக்கொத்து ★

### முகாமில் மரணம்

திருகோணமலை, ஜூலை 1

திருகோணமலை பிரட்ரிக் கோட்டை இராணுவ முகாமில் தடுத்து வைக்சப்பட்டிருந்த 44 வயதான என். ஞானப்பிரகாசம் என்பவர் உயிரிழந்தார். முகாமில் வைக்கப்பட்டிருந்த சமயமே இச்சம்பவம் இடம் பெற்றது. (இ–எ-68)

### மணிவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம், ஜூலை 1

நல்லூர் ஸ்ரீ சட்டநாத ஸ்வாமி தேவஸ்தானத்தில் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரால் இன்று புதன்கிழமை மாலை 5 – 30 மணியளவில் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை விழா கொண்டாடப்படும். திருவாசக பாராயணம் சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [இ]

### அகதிகள் பராமரிப்பு

அனலைதீவு, ஜூலை 1

விரிவு படுத்தப்பட்ட அகதிகள் பராமரிப்புச் சேவைகளை நல்ல முறையில் நடத்த 31 கிராமிய சுகாதார உதவியாளர்களை எவ். ஆர். எஸ். எஸ். நிறுவனத்தினர் நியமித்துள்ளனர்.

இவர்கள் அகதி முகாம்களிலுள்ள அகதிகளின் சுகாதாரம், சுத்தமான நீர், உணவு விநியோகம் ஆகிய சேவைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ–18)

### சீட்டிழுப்பு பின்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி இன்ரறக்ட் கழகத்தால் நேற்று 30 ஆம் திகதி நடத்தப்பட இருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு, நாட்டு நிலைமை காரணமாகப் பின்போடப்பட்டுள்ளது. சீட்டிழுப்புத் திகதி பின்னர் அறிவிக்கப்படும், (இ)

இந்தியமனிதாபிமான செயலைகண்டித்த

## கொழும்பு கத்தோலிக்கரின் செயலால்யாழ்.மக்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஜூலை 1

அரசியல்லாபம் தேடும் தீய சக்திகள் கொழும்பின் கத்தோலிக்கரைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் உணவுப் பொட்டலங்களைப் போட்ட இந்தியாவின் மனிதாபிமானச் செயலைக் கண்டித்துள்ளது யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது,

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடான 'பாதுகாவலன்', தனது ஜூலை மாத இதழில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த இதழில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

தன் சொந்த நாட்டு மக்கள் மேல், கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டு அப்பாவி மக்களைக் கொன்று குவித்து நிர்க்கதியாக்கும் அரசின் செயலைக் கண்டும் காணாதவர்கள் போலிருப்பவர்கள், உதவிக்கு வந்த இந்த அரசைக் கண்டிப்பது ஒரு பக்கச் சார்புடைய செயலாகவர்ணிக்கப்படுகிறது.

இத்தகைய ஒரு பக்கச் சாரபுடைய அரசியல் இலாபம் கருதிய செயல்கள் தேசிய ஒருமைப் பாட்டைஊக்குவிப்பதற்குப் பதிலாக, எங்களால் அவர்களுடன் வாழமுடியாது என்று பறைசாற்றுபவையாகவே அமைகின்றன.

இவ்வாறு 'பாதுகாவலன்' இதழில்குறிப்பிடப் பட்டுள்ளது. (இ–ள)

### மருதமடு திருப்பதியில் ஆடித்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 1

மருதமடுத் திருப்பதியின் ஆடித் திருவிழா வழமைபோல் இம்முறையும் நடைபெறும்.

மடுத்திருப்பதிப் பரிபாலகர் இவ்வாறு தெரிவித்தார்.

வழமை போல் நவநாள் வழிபாடுகளும், ஜூலை 2 ஆம் திகதி திருநாள் திருப்பலியும், திருச்சுருபப் பவனியும் நடைபெறும்.

புனித மரியாள் ஆண்டை ஒட்டி விசேஷ ஆராதனைகளும் நிகழும்.

சகல இடங்களுக்கும் போக்குவரத்துவசதிகள், உணவு, சுகாதாரசேவை ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (இ–ள)

### மகாதேவா மறைவுக்கு அனுதாபம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ் மாநகர வரியிறுப்பாளர் சங்க செயற்குழுக் கூட்டத்தில் மறைந்த தலைவர் திரு. சு. செ. மகாதேவாவின் நினைவாக இருநிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நீண்டகாலமாக எமது, சங்கத்தின் தலைவராகப் பணி புரிந்து தமது 75ம் வயதில் இயற்கையெய்திய திரு. சு. செ. மகாதேவாவுக்கு இச் சங்கம் தனது அனுதாபத்தைத் தெரிவிக்கிறது என்ற தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது.

துணைத் தலைவர் திரு. த. இராசேந்திரம் தலைவராகவும் திரு. இரா. வேதநாயகம் துணைத் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

இந்து சமயத்தைத் தொடர்ந்து

## கிறிஸ்தவ, இஸ்லாம் சமயங்கள் மீதும் அவர்களுக்குச் சந்தேகம்!

கொழும்பு,ஜூலை 1

கிறிஸ்தவ தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் இல்லாத இடங்களில் சில அக்கறை கொண்ட சக்திகள் அவற்றை நிர்மாணித்து வருவது ஏன்?

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் வருடாந்த மாநாட்டில் இக் கேள்வி எழுப்பப்பட்டது. காங்கிரஸ் தலைவர்; பேராசிரியர் எம். பி. ஆரியபாலவே தனது தலைமையுரையில் இக் கேள்வியை எழுப்பினார்.

இன்று தம்ம பள்ளிக்கூடங்களிலும் பார்க்க சாராயத் தவறணைகள் அதிகமாகக் காணப்படுகின்றன என்றும் அவர் சொன்னார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

நிகழ்காலத்தில் அமிழ்ந்திருப்பதை விட்டு தலையைத் தூக்கி, வருங்காலத்தைக் கொஞ்சம் நோக்கும் பண்பைப் பெற்றவர்களே வரலாற்றுச் சுவடிகளில் என்றென்றும் நிலைத்து நிற்கும் ஆற்றல் பெற்றவர்கள்.

— பேரறிஞர் அண்ணா

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
01.7.1987 த.பெ.இல: – 23

## பந்து வீச்சு படுகுழிக்குள் தள்ளும்!

இந்திய நிவாரண உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்காக அங்கிருந்து வந்த செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் இப்போது செல்கிறார்கள். அதனால் அவர்கள் ஸ்ரீலங்கா இராணுவம் நடத்திய அட்டூழியங்களையும், அவற்றினால் விளைந்த அனர்த்தங்களையும் நேரில் அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது. அவர்களைக் கண்டதும் மக்கள் கட்டிப்பிடித்துக் கதறி அழுது தமக்கு நடந்த துன்பியல் தாக்கங்களை எடுத்துச் சொல்கின்றனர். அதனால் இந்தியப் பிரதிநிதிகளால் குடாநாட்டு மக்களின் மனநாடியையும் அறியக் கூடியதாக உள்ளது.

வடமராட்சியில் அரச காட்டுமிராண்டித்தனம் முடிந்து நேற்றோடு ஒரு மாதம் பூர்த்தியானது. எனினும் பேரழிவின் நெடில் இன்னும் அங்கு வீசுவதை இந்தியப் பிரதிநிதிகள் நேரில் கண்டார்கள்.

தங்கள் 'விடுதலை நடவடிக்கைக்கு'ப் பின்னர் 'நல்லெண்ண நடவடிக்கை' நடப்பதாக ஸ்ரீலங்கா அரசு பெரிதாகப் பீற்றிக் கொண்டாலும் அங்குள்ள மக்கள் அடக்குமுறைக்கு உட்பட்ட அடிமை வாழ்வு நடத்துவதையும் இந்தியப் பிரதிநிதிகள் அறியும் வாய்ப்பு ஏற்பட்டது.

சரியாக ஒரு மாத காலத்தின் பின்னர் கடந்த திங்கட்கிழமை அப்பகுதி மக்கள் தமது இதயங்களைத் திறந்து பேசினார்கள். இராணுவ ஆட்சியில் தமக்குப் பாதுகாப்பும் இல்லை, சுதந்திரமும் இல்லை என்பதை தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறிவிட்டார்கள்.

ஸ்ரீலங்கா அரசின் இராணுவ ஆட்சி எப்படிப்பட்டது என்பதை இந்தியப் பிரதிநிதிகளுக்கு இது புலப்படுத்தியிருக்கும்.

குடாநாடு முழுவதும், வடக்கு, கிழக்கு முழுவதும் இராணுவத்தின் முழு ஆக்கிரமிப்புக்கும் உட்பட்டால் தமிழ் மக்களின் நிலை, வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதை உலகத்துக்கு எடுத்துச் சொல்லக் கூடிய தகுதி இந்தியப் பிரதிநிதிகளுக்கு இப்போது உண்டு.

வடமராட்சியைத் தொடர்ந்து குடாநாடு முழுவதையும் இராணுவத் தாக்குதல் மூலம் ஆக்கிரமிக்கும் திட்டம் ஸ்ரீலங்கா அரசிடம் இருந்தது. இந்திய உணவுப் படகுகள் கச்சதீவு மூலம் இங்கு வர முயற்சித்த சம்பவம், விமானம் மூலம் உணவுப் பொதி போட்ட சம்பவம் ஆகியவற்றால் அவை திடீரெனத் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

திட்டமிட்ட அந்தத் தாக்குதல்களை படைகள் எந்த நேரத்திலும் நடத்தக் கூடும் எனச் சொல்லப்படுகிறது.

இத்தகைய பின்னணியில் ஸ்ரீலங்கா அரசியல் தீர்வு ஒன்றை விரும்புவதாக எவரும் நினைக்க முடியாது ஆனால் இந்திய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி திங்கட்கிழமை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கூறியவை, ஸ்ரீலங்கா அரசியல் தீர்வை விரும்புவதாக அவர் எண்ணுகிறாரோ என்று நினைக்க வைக்கிறது.

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக, இந்தியா சில மாற்று நடவடிக்கைகளை தீர்மானித்து வைத்துள்ளது. எனினும் கொழும்பு எவ்வாறு தீர்க்க விரும்புகிறது என்பதைத் தெளிவாக அறிய இந்தியா விரும்புகிறது. அந்தப் பதிலைத்தான் இப்போது எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். பந்து இப்போது ஸ்ரீலங்காவின் பக்கத்தில் தான்= என்று ராஜீவ் தெரிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு ஒவ்வாது, அரசியல் தீர்வுதான் உகந்தது. இதனை இந்தியா மட்டுமன்றி அமெரிக்கா உட்பட ஏனைய நாடுகள் பல வற்புறுத்திக் கூறியும், ஸ்ரீலங்கா அதனைக் கிரகித்துக் கொள்வதாக இல்லை. வெறும் வாய்ச் சொல்லில் அரசியல் தீர்வு குறித்துப் பேசினாலும் செயலில் அதனை நாடுவதாக இல்லை.

அரசியல் தீர்வில் உண்மையான அக்கறை ஸ்ரீலங்காவுக்கு இருக்குமானால், இந்திய நிவாரணப் பொருள் விநியோகத்தை ஒட்டி தமிழ்ப் போராளிகள் அறிவித்த போர் நிறுத்தத்தைத் தானும் கைக்கொண்டிருக்கலாம் அல்லவா? அரசியல் தீர்வை நாடுவதற்கான ஓர் ஆரம்பமாக அதனைக் கொண்டிருக்கலாம் அல்லவா? அதுபற்றி அரசு சிந்தித்ததாகவும் தெரியவில்லை.

எனவே, இந்தியா எந்த மாற்றுத்தீர்வு யோசனை குறித்து முடிவு செய்திருப்பினும் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து இராணுவத்தை முற்றாக வாபஸ் பெறவேண்டும் என்ற முன் நிபந்தனையை ஸ்ரீலங்காவிடம் விதிக்க வேண்டும். அது நடக்காமல் அரசியல் தீர்வு எதையும் உருவாக்க முடியாது என்பது மட்டும் நிச்சயம். பந்தை மாறிமாறி வீசிக் கொண்டிருக்க தமிழினம் தொடர்ந்தும் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்க வேண்டி வரும். மேலும் படுகுழிக்குள் விழ வேண்டி இருக்கும்என்பதை இந்தியா இப்போதாவது உணர வேண்டும்.

★ "புடியுமானால் என்மீது வழக்குத் தொடருங்கள்"

# தென் ஆபிரிக்க அரசுக்கு பிஷப் டுட்டு சவால்!

கேப்டவுண், ஜூன் 30 நோபல் சமாதானப் பரிசு பெற்ற பிஷப் டுட்டு தென் ஆபிரிக்க வெள்ளை இன அரசுக்கு சவால் விடுத்திருக்கிறார். ''அவசர காலச் சட்ட விதிகளுக்கு இணங்க என் மீது வழக்குத் தொடர்ந்து பாருங்கள்''—

இப்படி பிஷப் டுட்டு சவால் விட்டார்.

மொஸாம்பிக் நாட்டு விஜயத்தை முடித்துக் கொண்டு பிஷப் டுட்டு ஜோஹன்னர்ஸ் பேர்க்குக்கு செவ்வாய் வந்து சேர்ந்தார்.

நிறவேற்றுமைக்கு எதிராக வன்செயல்களில் ஈடுபடவேண்டிய காலம் வரும்போது நான் சொல்வேன். அப்போது வன் செயல்களில் ஈடுபடுங்கள்—

இப்படி பிஷப் டுட்டு மொஸாம்பிக்கில் வைத்து பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

இதற்காக பிஷப் டுட்டு மீது அவசரகாலச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப் போவதாகத் தென் ஆபிரிக்க அரசு அறிவித்திருந்தது.

அதற்குப் பதிலாகவே பிஷப் டுட்டு இப்போது சவால் விடுத்திருக்கிறார். (இ–எ)

### தன்னுடன் நல்லுறவான ஆப்கான் அரசு ஒன்றையே சோவியத் விரும்புகிறது

மாஸ்கோ, ஜூன் 30 நடுநிலைமையுள்ள சுதந்திர, ஆனால் சோவியத்துடன் நல்லுறவை வைத்துக்கொள்ளும் ஆப்கானிஸ்தான் நாட்டையே சோவியத் யூனியன் விரும்புகின்றது.

சோவியத் தலைவர் மிக்செய்ல் கோர்ப்பச்சேவ் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மாஸ்கோவுக்கு விஜயம் செய்துள்ள ஐ. நா. பொதுச்செயலாளர் பெரஸ் டி டுயிலரை திரு. கொர்ப்பச்சேவ் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

அப்போது ஆப்கான் பற்றிய முன் கண்ட கருத்தை அவர் வெளியிட்டார்.

உலகசமாதானத்துக்கு ஐ. நா. ஆற்றி வரும் பணியை திரு.கோர்ப்பச்சேவ் பெரிதும் பாராட்டினார்.

அணு ஆயுத ஒழிப்புப் பற்றிய சோவியத்தின் நிலை பற்றியும் ஐ. நா. பொதுச் செயலாளரிடம் திரு. கோர்பச்சேவ் விவரித்தார். (இ–எ)

### தன்னியக்க ஆகாயப் பாதுகாப்பு

கெய்ரோ, ஜூன் 30 தன்னியக்க ஆகாயப் பாதுகாப்புத் திட்டம் ஒன்று இந்த ஆண்டு முடிவில் எகிப்தில் நடைமுறைக்கு வரும்.

எகிப்தின் ஆகாயப் படைத் தளபதி ஜெனரல் அடல்காலி இத்தகவலை வெளியிட்டார். (இ–எ)

### சுபாஷ்கிஷிங் டார்ஜீலிங் திரும்பினார்

புதுடில்லியில் உள்துறை அமைச்சர் பூட்டா சிங்குடன் பேச்சுக்களை நடத்திவிட்டு கூர்க்காலந்து தேசிய விடுதலை முன்னணித் தலைவர் சுபாஷ்கிஷிங் டார்ஜீலிங் திரும்பினார்.

### சைபீரியக் காகங்கள் புரியும் அட்டகாசம்!

மாஸ்கோ, ஜூன் 30 சைபீரியக் காகங்கள் மாஸ்கோவில் பெரும் அட்டகாசம் செய்கின்றன என்று அறிவிக்கப்படுகின்றது.

கண்ணாடி ஜன்னல்களை உடைக்கின்றன. பூனைகள், நாய்களைத் தாக்குகின்றன.

பெரிய கறுப்பு மண்ணிறமான இக்காகங்கள் 1970 ஆம் ஆண்டில் மாஸ்கோவுக்குக் கொண்டுவரப்பட்டன.

புறாக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவே இக்காகங்கள் கொண்டு வரப்பட்டன.

கண்ணாடி உடையும் சத்தம் இக்காகங்களைக் கவர்கின்றனவாம். (இ–எ)

### ராஜீவ் ரஷ்யாவுக்கு நாளை பயணம்

புதுடில்லி, ஜூலை 1 பிரதமர் ராஜீவ் காந்தி நாளை வியாழன் சோவியத் யூனியனுக்குச் செல்வார்.

சர்வதேச, பிராந்திய, இரு தரப்புப் பிரச்சினைகள் குறித்து பிரதமர், சோவியத் தலைவர் மிக்செய்ல் கோர்பச்சேவ்வுடன் பேச்சுக்கள் நடத்துவார்.

பிரதமர் காந்தி சனிக்கிழமை தாயகம் திரும்புவார். (இ-எ)

### புதுடில்லியில் தீ விபத்து 6 பேர் பலி!

புதுடில்லி, ஜூன் 30 புதுடில்லியில் 15 மாடிக் கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர். இவர்களில் ஒருவர் பெண்.

உயிர் தப்புவதற்காக மாடியில் இருந்து கீழே பாய்ந்ததால் இவர்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

இராணுவ ஹெலிக்கொப்டர்கள்மூலம் பலர் காப்பாற்றப்பட்டனர். (உ–எ)

### பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதங்கள்

வாஷிங்டன், ஜூன்30 பாகிஸ்தானுக்கு ஏழு கோடி எண்பது லட்சம் டாலர் பெறுமதியான ஆயுதங்களை வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

இவற்றில் 2,400 ஏவுகணைகள், 144 லோஞ்சர்கள் முதலியன அடங்கியுள்ளன. (இ–எ)

### வித்தாரம்

என்ன முரளியார்! முதலாந் திகதியோடை பட்டாயம் காணவேண்டும் எண்டு நினைச்சு வந்திட்டாய் போலை!

எப்பிடி! இப்ப ஒரு மெல்லிய அமைதி, இந்தியக் கப்பல்கள் காங்கேசன்துறைக்கு வந்த தோடை சனம் கொஞ்சம் மனம் தேறியிருக்கு.

நிவாரணக் கப்பல்கள் மாறி மாறி வந்து போக எப்பிடியும் இரண்டு மாதம் பிடிக்கும். அது வரைக்கும் உந்த மெல்லிய அமைதி நிலவும் எண்டு சனம் பதற்றம் குறைஞ்சு போயிருக்குது கள்.

ஆனால் உந்தக் கப்பல்கள் தொடர்ச்சியாய் காங்கேசன்துறை வாறதெண்ட விஷயத்துக்கு ஒரு முற்றுப்புள்ளிவைக்க ஸ்ரீலங்கா மேலிடம் சூழ்ச்சி கொட்டத் தொடங்கியிருக்குமாப்போலை தெரியுது!

இந்தியா விமானத்தாலை உணவுப் பொருள்களை யாழ்ப்பாணத்திலை போட்டதும் ஸ்ரீலங்காவுக்கு உணர்விழந்த நிலையாப் போச்சு. அதாலை இனியும் இந்தியாவோடை வீறுப்பும் வீம்பும் பேசிக்கொண்டிருக்கிறது புத்திசாலித்தனமில்லை எண்டு நினைச்சுத்தான் காங்கேசனுக்குக் கப்பல் வர ஒப்பந்தம் எழுதினவை. ஆனால் இந்தியா குடுக்கிற நிவாரணத்தின் அளவு அதிலை கட்டுப்படுத்தப்படயில்லை.

அதாலை இந்தியா தொடர்ச்சியாய் நிவாரணப் பொருள் வழங்கிறதை ஸ்ரீலங்கா தடுக்க ஏலாது. தடுக்கிறதெண்டால் இரண்டு பக்கத்தாருக்கும் இடையிலை பிறகும் பெரிய திருகு முறுகு எல்லாம் வரும்!

யாழ்ப்பாணத்துக்குத் தொடர்ச்சியாய் நிவாரணப் பொருள் அனுப்பிறதிலை எவ்வித பிரச்சினையும் இருக்கிறதாகத் தனக்குத் தெரியயில்லை எண்டு பிரதமர் ராஜீவ் காந்தி முந்தநாள் திங்கட்கிழமை நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலை சொல்லி இருக்கிறார்.

அது என்னத்தைக் காட்டுது எண்டால் நிவாரணப் பொருளைத் தொடர்ந்து குடுக்க வேண்டாம் எண்டு ஸ்ரீலங்கா மறித்தாலும் இந்தியா கேட்காது எண்டதைத்தான், இல்லையே?

நிவாரண உணவுப் பொருள் வந்ததோடை வடக்கிலை இந்திய ஆதரவு ஊர்வலங்கள் நடந்தது உனக்குத் தெரியும். ஆனால் நிவாரணப் பொருள் குடுக்க இணக்கம் தெரிவிச்ச பிறகும் தென்னிலங்கையிலை இந்திய எதிர்ப்பு ஊர்வலங்கள் நிறுத்தப்படயில்லை.

இந்தியா இஞ்சை உணவுப் பொருள் குடுக்கிறதாலை ஸ்ரீலங்கா இராணுவம் ஒண்டும் செய்யாது எண்டு நிச்சயமாய் சொல்ல முடியாது!

வடமராட்சிப் பகுதியை ஆக்கிரமிச்சது போல் ஏனைய பகுதியளை ஆக்கிரமிக்கிற எண்ணம் இன்னும் கொழும்புக்கு இருக்குது எண்டு ஒரு தகவல் போன மாசம் 14 ஆம் திகதியே கொண்டோடிக்குக் கிடைச்சுது.

கொழும்பு சென்றிருந்த ஒரு மதப் பிரமுகரிடம் இராணுவ அதிகாரி ஒருவர் அடுத்த தாக்குதல் பற்றி பெரிதாக விவரித்தாராம். இந்தியாவைப் பற்றி தாங்கள் அக்கறை கொள்ளப்போறதில்லை எண்டும், தாக்குதலை நடத்தத் தாங்கள் எப்பிடி எப்பிடி எல்லாம் 'பிளான்' பண்ணியிருக்கினம் எண்டதையும் சொன்னாராம்.

கதை வாக்கிலை சும்மா சொன்னாரோ தெரியாது எண்டு நினைச்சு, மதப் பிரமுகர் சொன்னதை

(4-ஆம் பக்கம் பார்க்க)

# காயங்களுடனேயே கைதிகள் பூஸா முகாமுக்கு வருகின்றனர்

பூஸா இராணுவ முகாமில் இடம் பெறும் சித்திரவதைகள், துன்புறுத்தல்கள், மற்றும் சுகாதாரச் சீர்கேடுகள் பற்றி சர்வதேச மன்னிப்புச் சபை ஆறுபக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன் இரண்டாவது பகுதி இன்று பிரசுரமாகின்றது.

**1. கைது செய்யப்படுவோர் பூஸா இராணுவ முகாமுக்குக் கொண்டு வரப்படும்போது காணப்படும் நிலை.**

கைது செய்யப்படும் தமிழர் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்கள், விசேஷ அதிரடிப்படை முகாம்களில் முதலில் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

அப்போது ஏற்படுத்தப்படும் காயங்களுடன் தான் தமிழ்க் கைதிகள் பூஸா முகாமுக்குக் கொண்டு வரப்படுகின்றனர்.

பிரிட்டனில் உள்ள நாடாளுமன்ற மனித உரிமைக்குழுவைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் 1985 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பூஸா இராணுவ முகாமுக்கு விஜயம் செய்தனர்.

அந்தச் சமயம் சுமார் 350 அரசியல் கைதிகளே அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

'அந்தக் கைதிகள் மிரட்டி, பயப்படவைக்கப்பட்டிருந்தனர்' என்று இரண்டு மனித உரிமைக் குழுப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

பிரதிநிதிகள் மேலும் தெரிவித்ததாவது;

'பெரும்பாலான அரசியல் கைதிகள் துன்புறுத்தலுக்கு ஆளாகியிருந்தனர் என்பது தெளிவாகத் தெரிந்தது. அடித்தே அவர்கள் துன்புறுத்தப்பட்டிருந்தனர். பெரும்பாலும் பிளாஸ்டிக் குழாய்களே அடிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன. உடலின் பின்புறத்தில் தான் தாக்குதல்கள் இடம்பெற்றன.

மிளகாய்ப் புகையைச் சுவாசிக்க வைக்கக் கூடியதாக உத்தரத்தில் காலைக்கட்டி தலைகீழாகத் தொங்கவிடுவது.

நகங்களுக்குள் ஊசிகளை ஏற்றுவது,

எரியும் சிகரெட்டினால் உடம்பு எங்கும் சுடுவது.

இவைதான் ஒருவரைக் கைது செய்தவுடன் பொலீஸார் மேற்கொள்ளும் துன்புறுத்தல்கள்!

இப்படி அந்த மனித உரிமைக் குழுப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க 1985 ஜூனில் அரசு கண்காணிப்புக்குழு ஒன்றை நிறுவியது. அக்டோபரில் அக்குழு பூஸா முகாமுக்குச் சென்றது.

அப்போது முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழரின் எண்ணிக்கை 611 ஆகும்.

அந்தக் குழுவின் அறிக்கை பிரிட்டிஷ் தூதுக்குழுவின் கூற்றை ஓரளவு உறுதிப்படுத்துகிறது.

கைதிகள் உடலில் காணப்பட்ட காயங்கள் கைதானவுடன் பாதுகாப்புப்படையினரால் ஏற்படுத்தப்பட்டவை என்றும் —

பூஸா முகாமுக்குக் கொண்டு வரப்படும் முன்னரே இக்காயங்கள் ஏற்படுத்தப்பட்டு விட்டன என்றும், கண்காணிப்புக்குழு அறிக்கை மேலும் தெரிவித்தது.

(வளரும்)

### விமானம் மூலம் உணவுபோடுவது மார்ச்சில் நடைபெற இருந்தது

மே26ஆம் திகதி யாழ் குடாநாட்டில் ஆரம்பமான தாக்குதலில் ஸ்ரீலங்கா அரசின் முப்படைகளும் முழுமூச்சுடன் ஈடுபட்டன.

ஒன்பது பிரதான முகாம்களில் இருந்து வெளியே வந்த இராணுவம், கடல், ஆகாயப் பாதுகாப்புடன் யாழ். குடாநாட்டின் வடகிழக்குப் பகுதியான வடமராட்சியைப் பிடித்துக் கொண்டது.

சுமார் ஆறாயிரம் துருப்புகளுக்கு மேலாக இத்தாக்குதலில் பயன் படுத்தப்பட்டன.

அதிக அளவில் கண்ணிகளைப்புதைத்து விட்டு தென்மேற்குப் பகுதிகளில் தங்களைத் தயார் நிலையில் வைப்பதே போராளிகளின் உத்தியாக இருந்தது. தவிர்க்க முடியாத இந்தியத் தலையீடும் எதிர்பார்க்கப் பட்டது.

இந்தியாவின் சிக்கல் நிலை உணரக் கூடியதாக இருந்தது.

போராளிகளின் அனுதாபத்தை இழக்கும் அளவுக்கு அமைதியான அர

> யாழ். குடாநாடு மீது விமானம் மூலம் உணவுப் பொதி போடும் திட்டம் கடந்த மார்ச் மாதத்திலேயே செயல்படுத்தப்பட இருந்தது.
>
> போபர்ஸ், பயர்பாக்ஸ் விவகாரங்களினால் அதனைச் செயல்படுத்த முடியாத நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டது.
>
> 'புரொண்ட்லைன்' கட்டுரையில் மனோஜ் ஜோஷி இப்படித் தெரிவித்திருக்கிறார்.
>
> ஜூன் 13-26 இதழில் வெளியான அக்கட்டுரையில் முதலாவது பகுதி நேற்று வெளியானது.
>
> இரண்டாம் பகுதி இன்று பிரசுரமாகின்றது.

சியல் தீர்வுகாணுவதில் தனது கீர்த்தியை இந்தியா பணயம் வைத்துச் செயல்பட்டது.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் ''இறுதித் தீர்வு'' காணும் முயற்சியைத் தடுகக முடியாத நிலையில் இந்தியா இருப்பதாகக்கருத முடிந்தது.

துன்பப்படும் தமிழர் மீது இந்தியா அனுதாபம் கொண்டுள்ளது நன்றாகத் தெரிந்த ஒன்று.

நீதியான, ஓமைதியான தீர்வு காணப்பட வேண்டும் என்பதிலும் இந்தியா உறுதி கொண்டுள்ளதும் தெரிந்ததே.

தனது நண்பர்களை இழக்கக்கூடிய முறையில் இந்தியா தனது வல்லமையைக் காட்டிக் கொள்ள முடியாது.

அப்படியான ஒரு நடவடிக்கை நாட்டில் விரிவான எதிரொலிகளை ஏற்படுத்தும். அத்துடன் பிராந்தியத்தின் இந்தியாவின் தலைமைத்துவ பங்கு கேள்விக்குறியாகி விடும்.

போராளிகளுக்கு ஆதரவாக தலையிடுவதன் மூலம் ஏற்படும் பலாபலன்களினால் ஏற்படக் கூடிய அதிர்ச்சிகளை சமாளிக்கக் கூடிய வல்லமை ஏனைய உலக வல்லரசுகளுக்குஉள்ளதுபோன்று இந்தியாவுக்கு இல்லை என்பது தெளிவாகிறது.

இந்த அளவு கோலின் அடிப்படையில் தான் தற்போது நடைமுறைப் படுத்தப்படும் நடவடிக்கை இடம் பெற்றது.

(வளரும்)

### மஹோற்சவம் முடிவுற்றது

யாழ்ப்பாணம், ஜூலை 1 தொல்புரம் மத்தி கொட்டடிப்பதி வாழ் அருள்மிகு ஆதி முத்து மாரியம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த வியாழக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் முடிவடைந்தது. (இ)



### பொய்யாமொழி

**குறள்:**

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்அல் லது.

**பொருள் :**

முற்றுகை செய்வதற்கு ஏற்ற இடத்தைக் கண்ட பின் அல்லாமல் எச்செயலையும் தொடங்கக் கூடாது; பகைவரை இகழவும் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களது வர்ண நிழற்படச்சுருள்களை
கம்பியூட்டர் முறையில் பிரதியாக்கம்
(பிரதி ஒன்று 5/- Processing
Free நெகட்டிவ் செய்ய இலவசம்)
செய்து பெற்றுக்கொள்ள
அன்புடன் அழைக்கின்றோம்.
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

01-07-1987 புதன்கிழமை

வர்ண நிழற்படப் பிரதிகளை
தத்ரூபமாக தந்திடும்
KO AK – FUJI – KONICA
TUDOR – FORTE
வர்ண நிழற்படச் சுருள்களைப்
பெற்றிட நாடுங்கள்
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23628

### உதவி அரச அதிபர் பிரிவுகளில்

# இந்திய உணவுப் பொருள்களை விநியோகிக்க குழுக்கள்

## நேற்றைய கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 1

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்காக ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஐந்து பேர் அடங்கிய குழு வீதம் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்திய உணவுப் பொருள்களை விரைவில் விநியோகிப்பது தொடர்பாக யாழ் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின் முடிவில் செய்தியாளர்களைச் சந்தித்த போது அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

அரச அதிபர் தலைமையில் நடந்த இந்த ஆலோசனைக் கூட்டத்தில் 13 உதவி அரசாங்க அதிபர்களும், மேலதிக அரசாங்க அதிபர்கள், இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், ஸ்ரீலங்கா யாழ் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரச அதிபர் உணவு விநியோகம் பற்றி மேலும் கூறுகையில் — இந்திய உணவுப்பொருள்களை விநியோகிப்பதற்காக சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் உதவி அரசாங்க அதிபர் தலைமையில் – ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கம் இந்திய செஞ்சிலுவைச்சங்கம் ப.நோ.கூ. சங்கம் பிரசைகள் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இக்குழுக்கள் தத்தமது பகுதிகளுக்கென ஒரு பதிவிடத்தை தெரிவு செய்து அறிவிக்கும்.

அகதிகளாக இடம்பெயர்ந்து முகாம்களிலும், வீடுகளிலும் தங்கியிருப்போர் குறிப்பிட்ட வதிவிடத்தில் தமது விவரங்களை தெளிவுபடுத்த வேண்டும்.

முதலில் தெல்லிப்பழை, கோப்பாய், சாவகச்சேரி, யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள அகதி முகாம்களில் உள்ள அகதிகளுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படும்.

கரவெட்டி, பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவுகளிலுள்ள சகலருக்கும் — அதிகம் பாதிக்கப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளின்படி நிவாரண உணவுப் பொருள்கள் வழங்கப்படும்.

அதன் பின்பே சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், நல்லூர், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தங்கியுள்ள — முன்னைய 6 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த இடம் பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

இவர்கள் தங்கள் விவரங்களை தற்போது தங்கியுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவின் வதிவிடத்தில் வெள்ளிக்கிழமைக்கு முன் பதிந்து கொள்ள வேண்டும்.

— இவ்வாறு அரச அதிபர் தெரிவித்தார். (இ-எ)

### இந்திய - - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா தனது மதிப்பை இழந்து விட்டது.

இன்று வரை தனது ஆக்கிரமிப்புச் செயலுக்காக இந்தியா மன்னிப்புக் கோரவில்லை.

இந்திய அரசை மன்னித்தாலும் ஆக்கிரமிப்பை மறக்க முடியாது.

ஹிட்லர், முசோலினி போன்ற ஆக்கிரமிப்பாளர்கள் அவமானமான முடிவையே இறுதியில் கண்டனர்.

சுதந்திரம் கோரி பிரிட்டனுக்கு எதிராக டி.எஸ். சேனநாயக்கா போராடினார்.

அப்போது முதலாளித்துவ சக்திகள் ஏகாதிபத்தியத்துக்குப் பந்தம் பிடித்தனர். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை எதிர்ப்பது மலையுடன் தலையை மோதுவதற்கு ஒப்பாகும் என்று அவர்கள் டி.எஸ். சேனநாயக்காவுக்குப் புத்தி சொன்னார்கள். ஆனால் அப்படி மோதியும் வெற்றி எமக்குத்தான்.

— இப்படி பிரதமர் சொன்னார். (இ-எ)

### வித்தாரம்----

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நான் ஆருக்கும் சொல்லையில்லை. "சென்சேஷன்" அடிச்சு ஏன் ஆக்களை வீணாய் பயப்படுத்துவான் எண்டு நினைச்சேன், ஆனால், கொழும்புப் பத்திரிகை ஒண்டு அரசின் உத்தேசத்தைச் செய்தியாய் வெளியிட்டிருக்கு.

இராணுவ உயர் அதிகாரியள் வெளிநாட்டு செய்தி ஏஜன்சியளுக்கும் அந்த தொலையிலை தான் பேட்டி குடுக்கினம். அதாலை அரசு நிலை இராணுவ நடவடிக்கைப் பக்கம் போலைத்தான் இருக்கு...!

### மாவை, வீமன்காமம் வீடுகளை மக்கள் பார்வையிட்டனர்

பலாலி, ஜூலை 1

இடம் பெயர்ந்த பின்னர் தமது வீடுகளுக்குச் செல்ல முடியாதிருந்த மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதி வீட்டுரிமையாளர்கள் நேற்று தத்தமது வீடுகளைச் சென்று பார்வையிட்டதுடன் தமது பொருள்கள் சிலவற்றையும் அவர்கள் எடுத்து வந்தனர்.

வீடுகளைப் பார்க்கச் சென்ற பல பொது மக்கள் தமது வீடுகளில் சில கதவுகள் பிளந்து சேதமுற்ற நிலையிலும் சில வீடுகள் தரைமட்டமாகி அந்த வீடுகள் அமைந்திருந்த இடங்களினூடாக புதிய வீதிகள், புதிய முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டிருப்பதையும் பார்த்து அதிர்ச்சியடைந்தனர்.

பல வீடுகளில் பெறுமதியான பொருள்கள் காணமல் போயுள்ளன.

வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் மணிக்கூடுகள், மேசை விரிப்புகள் பெறுமதியான உடுதுணிகள், பித்தளை, எவர்சில்வர் பாத்திரங்களும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

பல கால்நடைகளும் காணமற் போயுள்ளன.

வீமன் காமத்திலுள்ள குடியேற்றத்திட்ட வீடுகள் முழுதும்— சுமார் 350 வீடுகள் தரைமட்டமாகியுள்ளன.

பல இடங்களில் வீடுகளின் கூரை ஓடுகள் கழற்றப்பட்டு இராணுவக் கூடாரங்களுக்குப் பாவிக்கப்பட்டிருக்கின்றன. (உ-119)

### இந்திய மருந்துகளுக்கு ஸ்ரீலங்காவில் தடை விதிக்கக் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 1

இந்திய மருந்துகளை இறக்குமதி செய்வதை நிறுத்தும்படி சுதந்திர வைத்திய அதிகாரிகள் சங்கம் அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தைக் கேட்டுள்ளது.

சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் இது சம்பந்தமான பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தின் பிரதிகள் இந்திய வைத்திய சங்கம், காமன்வெல்த் நாடுகளில் உள்ள வைத்திய சங்கங்களுக்கு அனுப்புவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (உ-எ)

### ஸ்ரீலங்காவை.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தியில் ஆதரவு இல்லை.

கேள்வி: இந்தியாவின் மத்தியஸ்தம் தொடர்வது பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

லலித்: மத்தியஸ்தர் நியாயமானவராகக் காட்டிக் கொள்வதுடன் நிற்காது நியாயமானவராக செயலிலும் காட்டவேண்டும்.

கேள்வி: வடபகுதியில் இந்திய ஆக்கிரமிப்பு இடம் பெற்றால் ஸ்ரீலங்கா அரசு சமாதானத்தை நிலைநாட்ட ஐ.நா. துருப்புக்களை அனுமதிக்குமா?

லலித்: ஊகங்கள் குறித்து நான் கருத்து வெளியிட விரும்பவில்லை. எம்மைப்பொறுத்தமட்டில் நாட்டின் இறைமை, பிரதேச சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்குத் தேவையான இயலுமான நடவடிக்கைகளை எடுப்போம்.

கேள்வி: பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்பட்டால், பிரிட்டன், பாகிஸ்தான், அமெரிக்கா போன்ற நட்பு நாடுகளிடமிருந்து உதவி பெறுவீர்களா?

லலித்: இது சம்பந்தமான விவகாரங்களுக்குள் நான் போக விரும்பவில்லை. மற்ற நாடுகளில் உள்ள நிலைமைகளை நீங்கள் பார்ப்பீர்களானால் நாமும் அம்மாதிரித்தான் செயல்படுவோம் என்று எண்ணுகிறேன்.

கேள்வி: ஜே. வி. பி. யினர், தீவிரவாதிகளின் தாக்குதலை அரசு எப்படி சமாளிக்கும்?

லலித்: எம்மால் அவர்களைச் சமாளிக்க முடியும். இதைவிட வேறு மாற்றுவழியும் இல்லை.

தென் பகுதியில் மக்களின் ஆதரவு எமக்கு நிறைய உண்டு. விடுதலைப் புலிகளுடனான யுத்தத்திலும் மக்களின் ஆதரவும் அங்கும் அதிகரித்து வருகின்றது,

அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் இப் [illegible] வெளியானது. (இ-எ)



### வீரமரணமடைந்த மேஜர் கஜேந்திரன்

யாழ்ப்பாணம், ஜூலை 1

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிராந்திய தளபதி மேஜர் கஜேந்திரன் கடந்த 28 ஆம் திகதி மூதூரில் நடந்த நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்.

முப்படைகளாலும் ஆக்கிரமிக்கப்பட்டு சிங்கள பிரதேசமாக்கப்பட்டு வரும் திருமலை மண்ணில், விடுதலை விதைகளை விதைத்து அதை வளர்த்து உரம் பெறச் செய்தவர்களில் கஜேந்திரனும் ஒருவர்

மூதூர் பிராந்திய தளபதியான மேஜர் கணேஷின் வலதுகரமாக திகழ்ந்த கஜேந்திரன் மூதூர் மண்ணில் படைத்த சாதனைகள் அளப்பரியது.

கஜேந்திரன்

1981 ஆம் ஆண்டு பிற்பகுதியில் விடுதலைப் புலிகளின் பகுதிநேர உறுப்பினராக சேர்ந்து விடுதலைக்கான ஆரம்ப நடவடிக்கையில் அயராது பணியாற்றினார்.

1983 ஜூலையில் பயிற்சிப் பாசறையில் சிறந்த பயிற்சி வீரனாக அனைவரால் பாராட்டப்பட்ட கஜேந்திரன் பின்னர் திருமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

மூதூர்கட்டைபறிச்சான் கண்ணிவெடித் தாக்குதல், குச்சவெளி பொலீஸ் நிலையத் தாக்குதல், பட்டித்திடல் கண்ணிவெடித் தாக்குதல், இராணுவம் மீதான மன்மத வாச்சி தாக்குதல் போன்ற வெற்றிகர சாதனைகளில் இவன் திறமைக்கு சான்று பகரும்.

மூதூர் பிராந்திய தளபதி மேஜர் கணேஷின் மறைவையடுத்து புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் மூதூர் பிராந்திய தளபதியாக அவர் நியமிக்கப் பட்டார்.

— இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

### வெலிக்கடைக் கைதிகள் மன்னிப்புச் சபைக்கு விண்ணப்பம் அனுப்பினர்

கொழும்பு, ஜூலை 1

வெலிக்கடைச் சிறையில் உள்ள சுமார் 230 தமிழ் அரசியல் கைதிகள் சர்வதேச மன்னிப்புச் சபை, ஐ. நா. மனித உரிமைக்குழு ஆகியவற்றுக்கு விண்ணப்பம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

சிங்களக் கைதிகளினால் அண்மையில் தாக்கப்பட்ட சம்பவம் பற்றி இவ் விண்ணப்பத்தில் தமிழ் அரசியல் கைதிகள் விவரித்துள்ளனர்.

சிறை அதிகாரிகளின் தூண்டுதலில் தான் சிங்களக்கைதிகள் எம்மைத் தாக்கினர். அவர்களுக்கு ஆயுதங்கள் கூட சிறை அதிகாரிகள் சிலரினால் வழங்கப்பட்டன.

எம் உயிர்களுக்கு பாதுகாப்பு அளிக்க சர்வதேச ஸ்தாபனங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இப்படி அந்த விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ளது.

விண்ணப்பம் ஜனாதிபதி ஊடாக சர்வதேச ஸ்தாபனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-எ)

### கிராமங்கள்- - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாகி உள்ளார்கள்.

ஆயிரம் ஆயிரம் வேங்கைகள் களத்தில் நேரடிப் போரில் குதித்துள்ளனர்.

வாழ்வதற்காக போராடவேண்டிய கால கட்டம் இது. எனவே தொடர இருக்கும் இந்த உக்கிரப் போரில் நம் நிரந்தர விடிவை உறுதிப்படுத்திக் கொள்ள மக்கள் அனைவரும் இந்த போரில் நேரடியாக இணைந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கிறோம். — இப்படி அவர் கூறினார். (உ-10)

### யூனியன்-----

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சேதமடைந்துள்ள கட்டுவன்புலம் மகா வித்தியாலயமும் அடுத்த வாரத்தில் இருந்து தற்காலிகமாக வேறு பாடசாலையில் இயங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ-119)

### அங்கீகாரம்-----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளிகளை அங்கீகரிப்பதும் மாற்றுத் திட்டங்களில் ஒன்றாக இருப்பதாக அறியப்படுகிறது. எனினும் [illegible] ஊர்ஜிதம் செய்யக் கூடிய தான விபரம் எதுவும் கிடைக்கவில்லை. (அ-10)

### யாழ் வருகை

கொழும்பு, ஜூலை 1

மீண்டும் திரு. பூரி யாழ் வருகின்றார்.

'பருக்கா' கப்பலில் இருந்து இந்தியாவின் உணவுப் பொருள்களை இறக்கும் வேலைகள் இன்று ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதை மேற்பார்வையிடவே கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரி திரு. பூரி யாழ் வர உள்ளார் என்று தெரிய வருகின்றது. (உ-எ)

### தொண்டமான் சந்திப்பார்

சென்னை, ஜூலை 1

அமைச்சர் தொண்டமான் தமிழர் விடுதலை அமைப்புக்களுடன் சென்னையில் பேச்சுக்கள் நடத்த இருக்கின்றார்.

நாளை வியாழன் இப் பேச்சுக்கள் இடம் பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### இந்திய நிவாரணம் தொடர்ந்து கிடைக்கும்

#### லஷ்மி பூரி தகவல்

கொழும்பு, ஜூலை 1

இந்தியாவின் நிவாரண உதவிகள் யாழ் குடாநாட்டு மக்களுக்குத் தொடர்ந்து கிடைக்கும்.

கொழும்பு இந்தியத் தூதரக அதிகாரி திருமதி லஷ்மி பூரி மேற் கண்டவாறு தெரிவித்தார்.

'பருக்கா' கப்பலுடன் இந்திய உணவு விநியோகம் நிறுத்தப்பட்டு விடும் என்று புதுடில்லியில் உள்ள ஸ்ரீலங்காத் தூதர் பெர்னாட் திலகரத்தின கூறியிருந்தார்.

அந்தக் கூற்றையும் திருமதி லஷ்மி பூரி மறுத்தார்.

ஐலண்ட் பிரைட் பருக்கா ஆகிய கப்பல்களை இந்திய அரசு குத்தகைக்கு எடுத்துள்ளதன் நோக்கம் உணவுப் பொருள்களை யாழ் மக்களுக்கு அனுப்புவதே.

இந்த இரண்டு கப்பல்களும் தொடர்ந்தும் உணவுப் பொருள்களை ஏற்றி வர உள்ளன.

—இப்படி திருமதி லஷ்மி பூரி தெரிவித்தார். (உ-எ)

### சட்டவிரோத மின்பாவனை துண்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

மானிப்பாய் பட்டினத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள சட்டவிரோத மின்பாவனை இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டு வருகின்றன.

அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. கே. இராசசுந்தரம், மின் அத்தியட்சகர் ஜனாப் எம். பாறுக் ஆகியோரின் கண்காணிப்பின் கீழ் மின் ஊழியர்கள் கடந்த 26 ஆம் திகதி முதல் இவ்வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

### பிரசைகள் குழுவைச் சந்திக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 1

வயாவிளான் தெற்குப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்தோர் இன்று காலை 8 மணி முதல் விசாலாட்சி பாடசாலை மண்டபத்தில் வயாவிளான் பிரசைகள் குழு உறுப்பினர்களைச் சந்திக்குமாறு கேட்கப்பட்டிருக்கிறது.

துயர் துடைப்பு நிவாரணம் வழங்குவது தொடர்பாக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக குழுத் தலைவர் திரு. எஸ். என். ஜி. நாதன் தெரிவித்தார். (உ)

### முன்னாள் ஆணையாளர் மரணம்

பலாலி, ஜூலை 1

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் முன்னாள் உப அதிபரும் முன்னாள் மாவட்ட சாரணர் ஆணையாளருமான இ. விசுவநாதன் நேற்று காலமானார்,

பிரபல சமூகசேவையாளரான இவர் துர்க்கை அம்மன் கோவில் மற்றும் தெல்லிப்பழைப் பகுதி பொது நிறுவனங்கள் பலவற்றின் வளர்ச்சிக்கு உழைத்தவருமாவார். (உ-119)

### வடமராட்சியில் தங்குவதற்கு விருப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

இந்திய செஞ்சிலுவைச் சங்கம், ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கம், ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று வடமராட்சியில் ஒருவாரம் தங்கி நின்று அப்பகுதிச் சேதங்களைப் பார்வையிட விரும்புவதாக அரச அதிபரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ இணைப்பதிகாரியுடன் கலந்தாலோசித்து அதற்கானஒழுங்குகளை செய்வதாக யாழ் அரச அதிபர் உறுதியளித்துள்ளார் என்று யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு.எஸ். பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (இ-எ)



வடமராட்சியில் நடைபெற்ற இராணுவத் தாக்குதலின் போது காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ள நோயாளிகளை இந்திய, ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் பார்வயைிடுவதை முதலாவது படத்தில் காணலாம்.

மந்திகை ஆஸ்பத்திரியில் தற்பொழுது கடமையாற்றிக்கொண்டிருக்கும் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கதிரவேற்பிள்ளை, இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி திரு. சௌத்திரி, யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திரு.எஸ். நச்சினார்க்கினியன் மற்றும் ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் மந்திகை ஆஸ்பத்திரியில் வைத்து ஒன்றாக எடுத்துக்கொண்ட படத்தைக் கீழே காணலாம்.

### கோப்பாய் லயன்ஸ் கழக சீட்டிழுப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் | பரிசு | இலக்கம் | 5626 |
| 2ஆம் | ,, | ,, | 4657 |
| 3ஆம் | ,, | ,, | 1426 |

ஆறுதல் பரிசுகள்

| | |
|---|---|
| இலக்கம்: | 2422 |
| ,, | 2367 |
| ,, | 2271 |
| ,, | 2746 |
| ,, | 2749 |

கோப்பாய் லயன்ஸ் கழகம்

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி: 01-07-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Wednesday July 01, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org